# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

—: o :—

" முயற்சி திருவினை யாக்கும் "

CONNEMARA PUBLIC LIBRARY
7 - AUG 1956
MADRAS

தொகுதி 19 } ஜய ஹு தை மீ 1955 ஜனவரி { பகுதி 10

1358
FH

## பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | விளையாட்டுப் பிரயாணம் V. நடராஜன் | ... 127 |
| 2. | கணக்கு: கற்பித்தல் T. S. ராஜகோபாலன், B.A., L.T. | ... 132 |
| 3. | "வாழ்வில் வளம்" அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும் மாயூரம் கோ. ப. வேலன் | ... 134 |
| 4. | செய்தித் திரட்டு | ... 136 |
| 5. | மதிப்புரை | ... 140 |
| 6. | பத்திராதிபர் குறிப்புக்கள் | ... 141 |

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

## MEMBERS OF THE JOURNAL COMMITTEE

SRI S. NATARAJAN
„ R. KRISHNAMURTHY
„ K. KURUVILA JACOB
„ T. P. SRINIVASAVARADAN
„ V. NATARAJAN
„ V. ARUNAJATAI
„ L. MARIAPRAGASAM

SRI S. MARIA JOSEPH
„ J. VAIDYANATHAN
„ G. SRINIVASACHARI
„ C. RANGANATHA AIYENGAR, *Secretary*
„ V. B. MURTHI, *Asst. Secretary.*


---

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

### 1955 ஜனவரி மாதத்திய நாட்குறிப்புக்கள்

1-1-55 : *தென்னிந்திய ஆசிரியன்—நவம்பர் 1954—பிரசுரம்.*

4-1-55 : *மகாநாட்டு சப் கமிட்டிகளின் மீட்டிங்.*

15-1-55 : *ஸ்பெஷல் மகாநாடு, கல்வி மந்திரியவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.*

„ *நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்.*

16 1-55 : *ஸ்பெஷல் மகாநாடு இரண்டாவது தினம்.*

20-1-55 : *மிஸ்டர் ஈ. வி. கேடன்பியுடன் ஆங்கில போதனைபற்றி சர்ச்சை.*

24-1-55 : *பாலர் கல்வி—நவம்பர்-டிசம்பர் 1954—பிரசுரம்.*

26-1-55 : *ஆரம்ப கல்வி சீர்திருத்த வினாத்தாள்கள் ஜில்லா ஆசிரியர் கில்டுகளுக்கு அனுப்பப்பட்டன.*

28-1-55 : 45-*வது கல்வி மகா நாட்டிற்குத் தலைவர் தேர்ந்தெடுக்க ஓட்டிங் பேபர்கள் எல்லா ஆசிரியர் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டன.*

29-1-55 : *சங்கத் தலைவர் கள்ளிக்கோட்டையில் மலையாள ஜில்லா கில்டுகளின் கூட்டு கௌன்ஸிலை ஆரம்பித்து வைத்துப் பேசினார்.*

# பாலர் கல்வி

| | | |
|---|---|---|
| தொகுதி 19 | ஜய ஹு தை மீ<br>1955 ஜனவரி | பகுதி 10 |


## விளையாட்டுப் பிரயாணம்

V. நடராஜன்

பிள்ளைகள் பலவித விளையாட்டுக்களில் இயல்பாக ஈடுபட்டு மகிழும்போது இடையே அறிவுதரும் வகையில் சாதனங்கள் அமைப்பது ஆசிரியரின் சாமார்த்தியம் ஆகும்.

ஆகாய விமானத்தில் விளையாட்டுப் பிரயாணம் செய்வதாக பாவித்து ஒரு உதாரணம் தருகிறோம். விமான ஸ்டேஷன் எல்லா ஊர்களிலும் இருப்பதாக கற்பனை. சென்னைப் பட்டணத்திலிருந்து விமானம் புறப்படும். நான்கு அல்லது ஐந்து பேர்கள் பிரயாணத்தில் சேரலாம். இந்தியா முழுவதும் சுற்றிவரலாம்.

பிரயாணப் பாதையைக் காட்டும் படம் ஒன்று பெரிய அளவில் தயாரித்து அட்டையில் அழகாக ஒட்டி உபயோகிக்கவேண்டும். ஒவ்வொருவனும் தனக்கென ஒரு காய் வைத்துக் கொள்வான். எல்லாக் காய்களும் புறப்படும் இடத்தில் சேர்ந்து இருக்கும். நான்கு சோழிகள் வைத்துக் கொண்டு ஆடும்போது நிமிர்ந்து விழும் சோழிகள் கணக்கு.

4 சோழிகளும் நிமிர்ந்து விழுந்தால் 4, 4 சோழிகளும் கவிழ்ந்து விழுந்தால் 8 என்று கணக்கிடலாம். ஒருவனுக்கு ஒரு ஆட்டம்தான் உண்டு. ஒருவன் காயை இன்னொருவன் வெட்டி எடுப்பது கிடையாது.

ராமன், மணியன், கணபதி, லீலா—நால்வரும் ஆடுகிறார்கள். முதலில் ராமன் ஆட்டம். சோழிகளைப் போட்டதும் 2 சோழிகள் நிமிர்ந்து இருந்தன. அவன் தன் காயை புறப்படும் இடம் (0) இருந்து, படத்தில் 2 என்ற வட்டத்தில் நகர்த்துவான். படத்தில் பிரயாண வழியில் வட்டங்கள் இலக்கமிட்டு அந்தந்த ஊர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். நீங்கள் தயார் செய்து உபயோகிகும் படம் பெரிய அளவில் இருப்பதால் முக்கிய ஊர்களுக்கு அருகே அந்தந்த ஊரைப்பற்றிய படம் ஒன்று ஒட்டிவைக்கலாம். தாஜ் மகால், திருச்சி மலைக்கோவில், பாம்பன் பாலம், மதுரைக் கோவில், சாஞ்சி ஸ்தூபம், காசியில் கங்கா நதி ஸ்நான கட்டம், முதலிய பல படங்களைச் சேகரித்து ஒட்டிவைக்க வேண்டும். படங்கள் சிறிய அளவில் இருப்பதும், அந்தந்த இடத்தில் பொருத்தமாக ஒட்டுவதும் மிக முக்கியம். அந்தந்த ஊர்களுக்கு அருகே பிரயாணத்திற்கான குறிப்புக்களையும் எழுதுவது அவசியம். எழுதுவது சாத்தியமில்லையென்றால் துண்டுக் காகிதங்களில் எழுதி ஒட்டிவைக்கவேண்டும். ஒவ்வொரு ஊரைப் பற்றிய வர்ணனைக் குறிப்புக்களையும் படத்திலேயே எழுத முடியுமானால் மிகவும் நல்லது. இல்லையேல் தனிக் குறிப்புக்களாக வைத்துக்கொண்டு, அந்தந்த ஊருக்குச் சென்றவுடன், தங்கியிருக்கும்போது அந்த ஊரின் வர்ணனையைப் படிக்கவேண்டும். அவன் படிப்பதை எல்லாரும் கேட்கிறார்கள். அந்த ஊர் விசேஷத்தை அறிந்துகொள்கிறார்கள்.

இங்கு கொடுத்துள்ள ஜாபிதாவில் உள்ளவை: ஊர்கள், விளையாட்டுக் குறிப்புக்கள், விசேஷக் குறிப்புக்கள்.

ஜாப்தா 1. ஊர்கள்—

0. சென்னைப்பட்டணம்—புறப்படும் இடம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | 6. | ரெய்ச்சூர் |
| 2. | ஆற்காடு | 7. | ஹைதராபாத் |
| 3. | பங்களூர் | 8. | சிங்கரேணி |
| 4. | அனந்தப்பூர் | 9. | பத்ராசலம் |
| 5. | ஹம்பி | 10. | சண்டா |

| | | | |
|---|---|---|---|
| 11. | வர்தா | 31. | ஆபு மலை |
| 12. | நாகபுரி | 32. | அஹமதாபாத் |
| 13. | ஜப்பல்புரி | 33. | பரோடா |
| 14. | ராஞ்சி | 34. | சூரத் |
| 15. | டாட்டா நகர் | 35. | நாசிக் |
| 16. | கல்கத்தா | 36. | பம்பாய் |
| 17. | பாத்வான் | 37. | புனா |
| 18. | பாகல்புரி | 38. | கோவா |
| 19. | பாட்னு | 39. | உடுப்பி |
| 20. | கயா | 40. | மங்களூர் |
| 21. | காசி | 41. | கோழிக்கோடு |
| 22. | அயோத்தி | 42. | கொச்சி |
| 23. | அலகாபாத் | 43. | திருவனந்தபுரம் |
| 24. | ஆக்ரா | 44. | கன்னியாகுமரி |
| 25. | கான்பூர் | 45. | திருநெல்வேலி |
| 26. | ராம்பூர் | 46. | மதுரை |
| 27. | ஹரித்வார் | 47. | ராமேஸ்வரம் |
| 28. | டில்லி | 48. | திரிச்சிராப்பள்ளி |
| 29. | ஜெயபுரி | 49. | கூடலூர் |
| 30. | ஆஜ்மீர் | 50. | சென்னை |

திரும்பி வந்து சேர். ஆட்டம் முடிந்தது.

ஜாப்தா—2. விளையாட்டுக் குறிப்புக்கள்—(உங்கள் பெரிய படத்தில் அந்தந்த இடத்தின் அருகே எழுதி வைக்கலாம்.)

3. பங்களூர்—தங்கு. விமானம் பழுது பார்க்கும் வரை ; 4 போடு ; புறப்படு.

8. சிங்கரேணி—தங்கு. பெட்ரோல் நிரப்பிக்கொள்ளும் வரை ; 4 போடு ; புறப்படு.

11. வர்தா—தங்கு. இஞ்சின் பழுது பார்க்கும் வரை ; 4 போடு ; புறப்படு.

16. கல்கத்தா—தங்கு. விமானம் மாற்றவேண்டும் ; புதிய விமானம் வரும் வரை ; 3 போடு ; புறப்படு.

21. காசி—தங்கு. விமானம் மரத்தில் மோதியது ; ரிபேர்செய்யும் வரை ; 2 போடு ; புறப்படு.

27. ஹரித்வார்—தங்கு. பெட்ரோல் நிரப்பிக்கொள்ளும் வரை ; 3 போடு ; புறப்படு.

32. அஹமதாபாத்—தங்கு. இஞ்சின் ரிபேர் செய்யும் வரை ; 4 போடு ; புறப்படு.

36. பம்பாய்—தங்கு. விமானம் மாற்ற வேண்டும் ; புதிய விமானம் வரும்வரை ; 2 போடு ; புறப்படு.

43. திருவனந்தபுரம்—தங்கு. கடும் புயலில் விமானம் சேதம் ; புதிய விமானம் வரும்வரை ; 3 போடு ; புறப்படு.

48. திரிச்சிராப்பள்ளி—தங்கு பெட்ரோல் நிரப்பிக்கொள்ளும் வரை ; 2 போடு ; புறப்படு.

ஜாப்தா—3. ஊர்களைப்பற்றிய விசேஷக் குறிப்புக்கள்.

அறிவு விஷயக் குறிப்புக்கள் :—

1. காஞ்சிபுரம்—புராதன நகரம். பல்லவ ராஜ்யத்தின் தலைநகர், வரதராஜப் பெருமாள் கோவிலும் ஏகாம்பரேஸ்வரர் காமாக்ஷியம்மன் கோவிலும் பார்க்கவேண்டும். சிற்பக் கலையில் சிறந்தவை.

2. ஆற்காடு—முஸ்லிம் நவாப் ஆட்சிக் காலத்தில் ஆற்காடு தலை நகராயிருந்தது. பழைய கோட்டையின் மிச்சம் சில இடங்களில் காணலாம்.

3. பங்களூர்—மைசூர் மாகாணத்தில் முக்கிய பட்டணம். ஆரோக்கிய சீதோஷ்ண ஸ்திதி வாய்ந்தது. பல தொழிற்சாலைகள் உண்டு. ஆகாய விமானங்கள் கட்டும் இடம் இருக்கிறது.

5. ஹம்பி—புகழ்பெற்ற விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் ஆண்ட இடம். இடிந்த மண்டபங்களும் அரண்மனைகளும் இப்போது காணலாம்.

8. சிங்கரேணி—நிலக்கரிச் சுரங்கங்கள் இவ்விடம் உள. சுரங்கவேலை செய்யும் விபரங்களைத் தெரிந்துகொள்.

9. பத்ராசலம்—ஸ்ரீராமர் கோவில். முன் காலத்தில் ராம்தாஸ் கட்டியது. இதனருகே கோதாவரி நதியின் குறுக்கே அணை கட்டி, நீர்த்தேக்கம் திட்டமிட்டு இருக்கிறார்கள்.

11. வர்தா—மத்திய இந்தியாவில் உள்ளது ; மகாத்மா காந்தி ஸ்தாபித்த சேவகிராம் 4 மைல் தூரத்தில் இருக்கிறது. அவர் வாழ்ந்திருந்த குடிசையில் அவர் உபயோகித்த சாமான்களைக் காணலாம். ஆதாரக் கல்விப் பயிற்சி தரும் கல்வி ஸ்தாபனத்தில் நூற்பு, நெசவு முறைகளைப் பார்க்க வேண்டும்.

15. டாடா நகர்—இங்கு இந்தியாவிலேயே பெரிய இரும்புத் தொழிற்சாலை இருக்கின்றது. டாடா என்ற மேதாவி

வள்ளல் எற்படுத்தியது. இயந்திரங்கள் செய்யும் வேலைகளைப் பார்த்து வா.

16. கல்கத்தா—மேற்கு வங்காள மாகாணத் தலை நகர். ஹூக்ளி கங்கையின் பெரிய கிளை நதி. அதன் இருபுறமும் பட்டணம் அமைந்திருக்கிறது. கிழக்கே கல்கத்தா, மேற்கே ஹௌரா. இரண்டையும் இணைத்துப் பாலம் உண்டு. நடுவே இப்பாலத்தைத் தூக்கிக் கப்பல்கள் போக வழி விடமுடியும். காளிகோவில் மிகவும் பிரசித்தமானது.

21. காசி—கங்காநதி இவ்விடம் வடக்காக ஓடுகிறது. நீராடும் கட்டங்களில் யாத்திரிகர்கள் எப்போதும் காணப்படுவர். கங்கையின் குறுக்கே ரயில் பாலம் உள்ளது. ஹிந்துக்களுக்குக் காசி மிகவும் புனிதமான க்ஷேத்திரம்.

24. ஆக்ரா—தாஜ்மகால் என்ற அழகிய கட்டிடம் இங்கு உள்ளது. சலவைக் கற்களால் அமைந்த தாஜ்மகால் உலகத்திலேயே ஒரு அதிசயம். ஷாஜஹான் சக்கரவர்த்தி தன் மனைவியின் ஞாபகமாக இதைக் கட்டினார். அவர்கள் சமாதிகளை உள் அறையில் காணலாம்.

27. ஹரித்வார்—இமயமலை அடிவாரத்தில் உள்ளது. மலைகளிலிருந்து கங்கா நதி இறங்கி சமவெளிக்கு ஓட ஆரம்பிக்கிறது. இவ்விடம் கங்கை ஜலம் மிகவும் சுத்தமாக உள்ளது. பல்லாயிர யாத்ரிகர்கள் கங்கையில் நீராட வருவார்கள் சிறு செம்புகளில் கங்கை நீர் நிரப்பி மூடி 'சீல்' செய்து கொண்டு வருவார்கள்.

32. அஹமதாபாத்—பருத்தி ஆலைகள் இங்கு விசேஷம். ஆமதாபாத் வேஷ்டிகள் இங்கு செய்யப்படுகின்றன. மஹாத்மா காந்தி நடத்திய சபர்மதி ஆஸ்ரமம் சமீபத்தில் உள்ளது.

36. பம்பாய்—இந்தியாவின் பிரதான துறைமுகப்பட்டினம். கப்பல்கள் வந்து தங்க வசதியான இயற்கைத் துறைமுகம். தீவில் ஜன நெருக்கம் பெருகவே மாளிகைகள் வானத்தை நோக்கி அடுக்கு அடுக்கு மாடிகள் வைத்துக் கட்டியிருக்கிறார்கள். பம்பாய் பிரபல வாசஸ்தலம். உலகத்திய பல ஜாதிமத ஜனங்கள் இந்த நகரத்தில் வசிக்கிறார்கள். பருத்தி யந்திரசாலைகள் அதிகம்.

43. திருவனந்தபுரம்—கொச்சி, திருவாங்கூர் சேர்ந்த ராஜ்யத்தின் தலைநகர். மேற்குக் கரையில் உள்ள முக்கிய பட்டணம். பத்மநாபஸ்வாமி கோவில் பிரபலமானது. இவ்விடமிருந்து 42 மைல் கான்கிரீட் சாலையில் கன்னியாகுமரி முனை போய் வரலாம்.

44. கன்னியாகுமரி—மூன்று சமுத்திரங்கள் ஒன்று கூடும் இடம். இயற்கைக் காட்சியைப் பார்.

48. திருச்சிராப்பள்ளி — முற்கால சோழ ராஜ்யத்தின் தலைநகராயிருந்தது. நகர் நடுவில் செங்குத்தான ஒரு பாறை மேல் கோவில் உள்ளது. காவேரியும் கொள்ளிடமும் இதனருகே பிரியும். தென் இந்திய ரயில்வே தொழிற்சாலை இவ்விடம் உள்ளது. வானொலி நிலயமும் இருக்கிறது.

17 ஊர்களுக்கு மாத்திரம் விஷயக் குறிப்புக்கள் தந்திருக்கிறோம். இதர ஊர்களுக்கும் வேண்டுமானால் விஷயக் குறிப்புக்களை இம்மாதிரியே நீங்கள் தயார் செய்து கொள்ளலாம். ஆனால் ஒவ்வொரு ஊருக்கும் விஷயக் குறிப்பு படிக்கவேண்டுமாயின், விளையாட்டு சுவாரஸ்யம் குறைந்து விடும்.

இங்கு தந்துள்ள குறிப்புக்கள் உங்களுக்கு ஒரு மாதிரியாக உதவும். நீங்களே வேறுவகையில் இன்னும் சுவையுள்ள சிறப்பான குறிப்புக்களைத் தயார் செய்து கொள்ளலாம்.

பெரிய படமாக இருந்தால் முடிவு எண் 50 என்று இல்லாமல் 100 என்று வைத்துக் கொண்டு இடையே உள்ள வட்டங்களையும் ஊர்களையும் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

ராமன் ஆட்டம் 2 விழுந்தது. படத்தில் 2 இலக்கம் என்ன ஊர்? பத்திரிகையில் பிரசுரித்த படம் சிறியது ஆதலால் ஊர்கள் ஜாப்தாவும் தனியே தந்து இருக்கிறோம். ஜாப்தா 1 பார்க்க. நீங்கள் உபயோகிக்கும் படம் பெரியதாக இருக்கும் ஆதலால், ஊர்கள் ஜப்தா தனியாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அடுத்தது மணியன் ஆட்டம். அவன் சோழிகளைப் போட்டதில் 3 விழுந்தன். தன் காயை புறப்படும் இடத்திலிருந்து 3 இலக்க வட்டத்திற்கு நகர்த்தினான். இது என்ன ஊர்? 3. பங்களூர்—இந்த இடத்தில் விளையாட்டுக் குறிப்பு எழுதப் பட்டிருக்கிறதை கவனி.

3. பங்களூர்—தங்கு. விமானம் பழுது பார்க்கும் வரை ; 4 போடு ; புறப்படு.

மணியன் மறுபடியும் அடுத்த ஆட்டத்தில் 4 போட்டால்தான் அவன் காயை நகர்த்த முடியும். அதுவரை பங்களூரில் தங்கவேண்டும். விமானம் ரிபேர் செய்ய வேண்டுமென்று பாவனை. தங்கியிருக்கும் காலத்தில் பங்களூர் பட்டணத்தைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும். ஊரைச் சுற்றிப்பார்த்து வருவதாக கற்பனை செய்து கொள்வான்.

பங்களூர்—அறிவு விஷயக் குறிப்புக் களைப்படி. 3. பங்களூர்—மைசூர் இராஜ்ஜியத்தில் முக்கிய பட்டணம். ஆரோக்கிய சீதோஷ்ண ஸ்திதி வாய்ந்தது. ஆகாய விமானங்கள் கட்டும் இடம் இருக்கிறது. பட்டு நெசவு சாலைகள் உண்டு.

விளையாட்டுக் குறிப்புக்கள்—எல்லா ஊர்களுக்கும் வேண்டியதில்லை. சில ஊர்களில் மாத்திரம் குறிப்பிட்டால் போதும். ஜாப்தா 2 பார்க்க.

அறிவு விஷயக் குறிப்புக்களும் சில ஊர்களுக்கு மாத்திரம் தந்து இருக்கிறோம். ஜாப்தா 3 பார்க்க.

மணியனுக்குப் பிறகு கணபதி ஆட்டம், அவனுக்கு 4 விழுந்தன. அவன் காயை 4 வட்டத்தில் நகர்த்தினான். இது என்ன ஊர்? அனந்தப்பூர். ஏதேனும் விளையாட்டுக் குறிப்பு அல்லது அறிவு விஷயக் குறிப்பு இருக்கிறதாவென்று ஜாப்தாவில் பார்த்தான். ஒன்றுமில்லை.

கணபதிக்குப் பிறகு லீலாவின் ஆட்டம். 2 விழுந்தது. அவள் காயை 2 வட்டத்தில் நகர்த்தி வைத்தாள். இங்கே இன்னொரு காய் இருக்கிறதல்லவா? அது ராமனது. இப்போது நால்வரும் ஒருமுறை ஆடிவிட்டதால் மறு சுற்று ஆட்டம். மறுபடியும் ராமன் தொடங்குவான். ராமன் ஆட்டத்தில் 4 விழுந்தது. அவன் 2 வட்டத்திலிருந்து 4 கூட்டி, 6 வட்டத்தில் அவன் காயை நகர்த்தி வைத்தான். இது என்ன ஊர்? ரெய்ச்சூர். இரண்டு ஜாப்தாக்களிலும் இவ்வூரைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. மணியனுக்கு ஆட்டம். அவன் காய் 3 வட்டத்தில் அதாவது பங்களூரில் இருக்கிறது. சோழிகளைக் குலுக்கிப் போட்டான். 3 விழுந்தது! "அடடா! மறுபடியும் 3. உங்களுக்கெல்லாம் 4 விழுந்தது. அந்த 4 எனக்கு விழமாட்டேன்கிறதே" என்றான் மணியன். 4 போட்டால்தான் அவன் காயை நகர்த்தலாம். "இன்னும் உன் விமானம் ரிபேர் செய்தாகவில்லை. பங்களூரில் பார்க்கவேண்டிய இடங்களை எல்லாம் நன்றாகப் பார்க்க அவகாசம் வேண்டுமே! சாவதானமாய் இரு" என்று லீலா தமாஷ் செய்தாள். கணபதி ஆட்டம். அவன் சோழிகளைப் போட்டதும் 4 விழுந்தது. 4 வட்டம் அனந்தப்பூரிலிருந்து அவன் காயை 8 வட்டம் சிங்கரேணிக்கு நகர்த்தினான். "இங்கே ஏதோ குறிப்பு இருக்கே!" என்று அவன் கவனித்தான்.

விளையாட்டுக் குறிப்பு—8. சிங்கரேணி—தங்கு. பெட்ரோல் நிரப்பிக்கொள்ளும் வரை ; 4 போடு. புறப்படு.

"எனக்கென்ன 4 போடுவது பிரமாதமில்லை."

"அது சரிதான்! அந்த ஊரைப்பற்றிய விசேஷத்தைப் படி."

அறிவு விஷயக் குறிப்பு—

8. சிங்கரேணி—நிலக்கரிச் சுரங்கங்கள் உண்டு. சுரங்கத்தில் வேலை செய்வதைப் பார். சுரங்கத்தொழில் விவரங்களைத் தெரிந்துகொள்.

"சுரங்கத்தில் இறங்கிப் பார்த்துக் கொண்டு இரு." இப்போது லீலாவின் ஆட்டம். 2 விழுந்தது. அவள் காய் 2 வட்டத்தில் (ஆற்காடு) இருந்ததை 4 வட்டத்தில் நகர்த்தி வைத்தாள். 4 என்ன ஊர்?

மறுபடியும் ராமன் ஆட்டம். அவன் காய் 6 வட்டத்தில் (ரெய்ச்சூர்) இருக்கிறது. 3 விழுந்தது. அவன் காயை 9 வட்டத்தில் நகர்த்தினான். 9 என்ன ஊர்? பத்ராசலம்.

"என்ன? நீயும் தங்கவேண்டுமா? விமானம் ரிபேரா?"

"இல்லை. இந்த ஊரைப்பற்றிய விசேஷத்தை மாத்திரம் படிக்கிறேன். கேளுங்கள்—

9. பத்ராசலம்—முன்காலத்தில் பக்தர் ராம்தாஸ் கட்டிய ஸ்ரீராமர் கோவில் பார்க்கவேண்டும். இந்த ஊர் அருகே கோதாவரி நதியின் குறுக்கே அணை கட்டி நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டம் செய்திருக்கிறார்கள்."

"சரி! மணியா! பங்களூரிலிருந்து கிளம்புவது எப்போது?"

"இதோ பார், இந்தத் தடவை 4 விழாவிடில் என்ன செய்கிறேன் பார்!" என்று சொல்லிக்கொண்டு கணபதி சோழிகளை வாங்கிக் குலுக்கிப் போட்டான். 4 விழுந்தன!

"பேஷ்! சொன்னபடி செய்துவிட்டாய்."

மணியன் 3 வட்டத்திலிருந்து (பங்களூர்) காயை 7 வட்டத்திற்கு நகர்த்திவைத்தான்.

"இது என்ன ஊர்? அங்கேயும் ஏதாவது தங்கவேண்டுமோ?"

"இல்லை!"

இந்தமாதிரியே பிள்ளைகள் தொடர்ந்து ஆடுவார்கள். ஒவ்வொருவரும் தத்தம் காய்களை நகர்த்திச் சென்று முடிவு ஆக 50 வட்டம், (அதாவது சென்னைப்பட்டணம்) புறப்பட்ட இடம் திரும்பிவந்தவுடன் ஆட்டம் முடிவு. முதலில் திரும்பி வந்தவனே வெற்றி பெற்றான். ஒவ்வொருவனும் முடிவுக்கு வரவேண்டும். முடிவு நம்பர் வட்டம் சேருமுன், எந்த வட்டத்தில் இருக்கிறதோ அங்கிருந்து 50 (முடிவு எண்)க்கு எவ்வளவு நம்பர் வேண்டுமோ அந்த நம்பர் போட்டுச் சேரவேண்டும். 42ல் இருப்பவன் 8 போட்டு உடனே 50க்குச் சேர்ந்துவிடலாம். 48ல் இருப்பவன் 2 போட்டு 50ல் சேரவேண்டும்; அவன் 3 போட்டால் பலன் இல்லை, அல்லது 4 போட்டாலும் பிரயோசனமில்லை. 1 விழுந்தால் 49க்கு நகர்த்துவான்; ஆனால் அடுத்த ஆட்டத்தில் 1 விழவேண்டும். அப்போதுதான் 50 சேர முடியும்.

பிரயாண வழியில் இடையே அதிகம் தாமதிக்காமல் வந்துவிட்டாலும், முடிவு சமயம் இவ்விதம் மாட்டிக்கொண்டு 50 சேரக் காத்திருக்கவேண்டிவரும். பின் தங்கிவிட்டதாக எண்ணியவர்களில் சிலர் முடிவில் சீக்கிரமே 50 சேர்ந்து விடலாம்.

இந்த விளையாட்டில் பிள்ளைகள் வெகு சுலபமாகவும் சுவையுடனும் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். அந்தந்த விளையாட்டுக்கான விதிகளுக்கு உட்பட்டு அடங்கி நடக்கும் பயிற்சி ஒருபுறம் இருக்கட்டும், இது எல்லா விளையாட்டுக்களிலும் கிடைக்கும் பயிற்சியல்லவா! இந்த விளையாட்டில் சிறப்பான பயிற்சியை கவனிப்போம். தேச படத்தில் முக்கிய ஊர்கள் இருக்கும் இடங்களைச் சுலபமாகத் தெரிந்து கொள்கிறார்கள். இரண்டு மூன்று முறை இந்த விளையாட்டு ஆடிய பிறகு, இந்தியா படத்தில் டில்லி எங்கு உள்ளது என்று கண்டுபிடிக்க அதிக சிரமப்படமாட்டான்! கொச்சி சமீபம் டில்லியைத் தேடமாட்டான்! இதை ஆசிரியர்கள் அனுபவத்தில் சோதித்துப் பார்க்கலாம்.

தங்குவது, விமானம் ரிபேர் என்று எல்லாம் பாவனைக் குறிப்புக்களினால் விளையாட்டு ருசிகரமாகும். இடையிடையே பிள்ளைகள் ஒருவரையொருவர் தமாஷாகப் பேசி மகிழ்ந்து பொழுது போக்குவர். அதுமாத்திரமல்ல! தங்கிய ஊரைப்பற்றிய விசேஷங்களைப் படித்துப் பேசி அறிந்துகொள்கிறார்கள். ஆங்காங்கு படங்கள் ஒட்டியிருப்பதால், அந்தந்த ஊரில் உள்ள முக்கிய இடங்களை நேரில் பார்ப்பது போல ஒரு உத்சாகம் உண்டாகிறது. அந்த ஊர் விசேஷத்தைப்பற்றி வெறும் பேச்சு போதனையைவிட, இவ்விதம் பிள்ளைகள் தாமே படித்து அறிந்துகொள்வதால், பிள்ளைகள் பெறும் அறிவு வலிமையாக நீடித்து இருக்க சாத்தியமாகிறது.

இந்தியா முழுவதும் கற்பனைப் பிரயாணம் செய்வது போலவே, சிறிய பிரயாணங்களும் திட்டமிட்டு இம்மாதிரியே படங்கள் தயார் செய்து விளையாடலாம். "காசிப் பிரயாணம்", "ராமேஸ்வரம் போய் வருவது", "தமிழ் நாட்டில் பிரயாணம்" என்று பலவிதமாக அமைத்துக் கொள்ளலாம். அந்தந்த பிரயாணத்திற்கான தனிப்படம் குறிப்புக்கள் தயார் செய்யவேண்டும்.

இதேமாதிரி "உலக முழுவதும்" ஆகாய விமானப் பிரயாணம் திட்டமிட்டு விளையாடலாம். இதற்கான பெரிய படம் தயார் செய்து உபயோகிக்கவேண்டும். பொழுது போக்காக வீட்டில் பெரியவர்கள்கூட இவ்வித விளையாட்டுக்களில் ஈடுபட்டு மிகவும் உத்சாகம் அனுபவித்ததை அநேக இடங்களில் நான் கவனித்திருக்கிறேன்.

பள்ளி ஆசிரியர்கள் இந்த விளையாட்டு முறையை மிகவும் பயன்படுத்த வேண்டும்.

# கணக்கு: கற்பித்தல்

## பெருக்கல்: 10, 5, 2 வாய்பாடுகள்

T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி

### முன்னுரை

பெருதுவது என்பது மேன்மேலும் ஓங்குவது அல்லது வளர்வதாகும். பெருக்கல் என்பதற்கு அடிப்படையான பொருள், மேன்மேலும் ஓங்கச் செய்வது அல்லது வளரச் செய்வது என்பதாகும். எனினும் நாளடைவில் இச்சொல், மடங்குக் கணக்கில் பெருகுவதைக் குறிப்பதாயிற்று. கையில் 4 பழங்கள் இருந்தால், இந்த எண்ணிக்கை கணித பரிபாஷைப்படி பெருகுவது எனில், 8 (இரண்டு மடங்கு 4), 12 (மூன்று மடங்கு 4), 16 (நான்கு மடங்கு 4)...இவ்வாறு பெருகுவதாகும்.

பெருக்கல் என்பது கூட்டலின் சுருக்கம். வரிசைக்கு 4, 4 ஆக 5 வரிசை பழங்கள் இருந்தால், இவற்றின் மொத்த எண்ணிக்கையை 4 + 4 + 4 + 4 + 4 என்று கூட்டிச் சொல்லலாம். ஆயினும் நாம் 5 மடங்கு 4 என்று மனதில் உணர்ந்து 20 என்று சொல்லி விடுகிறோம். முதன் முதலில் மனிதர் பெருக்கல்களைக் கூட்டல்களாகச் செய்து, பின்பு தமக்கு ஏற்பட்ட அனுபவத்தால், விடைகளை வாய்பாடாக அமைத்து, இவ்வாறு வாய்பாடுகளை நமக்கு அளித்துள்ளனர்.

நாம் சிறுவர்களுக்கு கற்பிக்கவேண்டிய வாய்பாடுகள் 2, 3, 4, 5,......என்று 16 வரையிலாகும். இவற்றை வரிசைப்படியே முதலில் இரண்டாவது வாய்பாடும், பின்பு 3-ம் வாய்பாடும், பின்னர் 4-ம் வாய்பாடும்—இவ்வாறு நெடுங்காலமாகக் கற்பித்து வந்தனர் ஆசிரியர். இவற்றைக் கற்பித்ததும் சரியான முறைப்படி அல்ல. ஆதலால் கற்றவர்களுக்கு மனக்கசப்பு ஏற்பட்டு, பெருக்கல் வாய்ப்பாடு என்றாலே மிகவும் பயப்பட்டனர். இங்கிலாந்தில் 12-வது, 13-வது நூற்றாண்டுகளில் வெளிவந்த ஒரு செய்யுளின் பகுதி

Multiplication is a vexation,
Division drives me mad.

இவ்வாறான பயத்திற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். அண்மையில் வாய்பாடுகளைக் கற்கும் சிறுவர் சிறுமிகளின் மனோநிலையை உணர்ந்த பேராசிரியர் பலர், நெடுங்காலம் ஆராய்ச்சி நிகழ்த்தி, அதன் விளைவாக, வாய்பாடுகளை எந்த வரிசையில், எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்று வகுத்துள்ளனர். இரண்டாம் வகுப்பிலுள்ளோருக்குக் கற்பிக்கவேண்டிய வாய்பாடுகள் 10, 5, 2 என்ற வரிசைக்கிரமத்திலேயாகும். வாய்பாடுகள் பொதுவாக, மாந்தரது சூழ்நிலைக்கேற்ப, அவர்களது தேவைகளுக்குத் தக்கவாறு, பண்டங்களைப் பார்த்து, கையில் எடுத்து எண்ணிப் பெறப்பட்டவையாதலால், இம்முறைப்படியே சிறுவர் சிறுமியர் வாய்பாடுகளை மனதில் தேக்கிக்கொள்வது சால நன்று என, முறைகள் காட்டியுள்ளனர் போதனா முறையில் ஆராய்ச்சி செய்துள்ள பெரியோர்.

### 10-ம் வாய்பாடு

இந்த வாய்பாட்டையும் ஏனை இரண்டினையும் எண்ணிக்கையின் மூலமாகத்தான் கற்கவேண்டும். இந்த வாய்பாட்டை கற்பிப்பதற்கு "நூறு-படம்" மிகப் பயன்படும். இந்தப் படத்தைக்கொண்டு "ஒரு பத்து, பத்து," "இரண்டு பத்து, இருபது," "மூன்று பத்து, முப்பது,"...இவற்றைப் பிள்ளைகள் தெளிவாக அறிந்து கொள்ளும்படி செய்து, பின்னர் வாய்பாட்டைப் பெருக்கல் குறியுடன் - கரும்பலகையில் பின்வருமாறு எழுதவேண்டும்:

$1 \times 10 = 10$, $3 \times 10 = 30$, $5 \times 10 = 50$,
$2 \times 10 = 20$, $4 \times 10 = 40$, ... ... ...


பின்பு புளிய விரைகளை அல்லது சோழிகளைப் பத்துக்கொண்ட குவியல்களாகக் குவித்து, இரண்டு குவியல்கள், மூன்று குவியல்கள், நான்கு குவியல்கள்,......இவற்றுள் எத்தனை விரைகள் என்று சொல்லச் செய்யவேண்டும்.

### 5-ம் வாய்பாடு

உபகரணங்கள்: சோழிகள் அல்லது புளிய விரைகள், ஐந்து ஐந்தாகப் புள்ளிகள் அல்லது பூக்கள் 10 வரிசை அமைந்துள்ள படம்.

முதன் முதலில் புளிய விரைகளை 5, 5 ஆகக் குவித்துவைக்கச் செய்யவேண்டும். 2 குவியல்களில், 3 குவியல்களில்; 4 குவியல்களில், 5 குவியல்களில்,...எத்தனை விரைகள் என்று எண்ணச் செய்து, அப்போதப்போது 'இரண்டு, ஐந்து, பத்து', 'மூன்று ஐந்து, பதினைந்து', 'நான்கு ஐந்து, இருபது',...என்று குழந்தைகளைச் சொல்லச் செய்யவேண்டும்.

பின்பு கீழுள்ளவாறு படத்தைப் பயன்படுத்தி, வாய்பாட்டை ஏற்படுத்தச் செய்யலாம்:



| | |
|---|---|
| ஒரு வரிசையில் | 5 |
| இரண்டு வரிசைகளில் | 10 |
| மூன்று வரிசைகளில் | 15 |
| நான்கு வரிசைகளில் | 20 |
| ஐந்து வரிசைகளில் | 25 |
| ஆறு வரிசைகளில் | 30 |
| ஏழு வரிசைகளில் | 35 |
| எட்டு வரிசைகளில் | 40 |
| ஒன்பது வரிசைகளில் | 45 |
| பத்து வரிசைகளில் | 50 |

பின்னர் வாய்ப்பாட்டைக் கரும்பலகையில் எழுதி, குழந்தைகளை மனப்பாடஞ் செய்யச் சொல்லவேண்டும்.

| | | |
|---|---|---|
| $1 \times 5 = 5$, | $5 \times 5 = 25$, | $9 \times 5 = 45$, |
| $2 \times 5 = 10$, | $6 \times 5 = 30$, | $10 \times 5 = 50$. |
| $3 \times 5 = 15$, | $7 \times 5 = 35$, | |
| $4 \times 5 = 20$, | $8 \times 5 = 40$, | |

### 2-ம் வாய்பாடு

எண்களை 2, 2 ஆக எண்ணியே இந்த வாய்பாட்டை நிருமிக்கலாம்.

### வாய்பாடுகளில் பழக்கம்

வாய்பாடுகளை முன்னம் குழந்தைகள் உருப்போட்டு மனப்பாடஞ் செய்துவந்தனர். மேலே சொல்லியுள்ள முறைப்படி இவற்றைக் கற்று, இவற்றை மனதில் பதித்துக் கொள்ள பயிற்சிகள் வேண்டும். பயிற்சிகள் எளியனவாயும் குழந்தைகளின் சூழ்நிலையை ஆதாரமாகக் கொண்டுள்ளனவாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் கற்கும் மற்றைப் பாடங்களையும் பின்பற்றியவையாகவேண்டும். வாய்பாடுகளில் வரும் பெருக்கல்கள் கொண்ட கணக்குகளை முதலில் குழந்தைகளுக்குக் "கதைகளாக" (Number stories)ச் சொல்லிவந்தால், குழந்தைகள் மிகவும் ரஸித்துக் கணக்குகளைச் செய்வார்கள். பிள்ளைகளின் சூழ்நிலை, பள்ளிக்கூடம் வாய்ந்துள்ள இடத்திற்கேற்பவும், அவ்வக்காலத்தில் மாறி மாறி வருவதால், கற்பிப்பவர் சூழ்நிலையை முதலில் ஆராய்ந்து, மனக் கணக்குகளை ஜோடிக்கவேண்டும். பின்வரும் பயிற்சிகள் சில எடுத்துக்காட்டுகளாகும்.

1. (வகுப்பறையில்) வரிசைக்கு 10 குழந்தைகள் வீதம் இருக்கிறார்கள். 3 வரிசைகளில்...குழந்தைகள்.

2. அம்மா 5 பொம்மைகள் வாங்கினாள்; ஒவ்வொரு பொம்மையும் 2 அணா விலை. எல்லா பொம்மைகளும் சேர்ந்து விலை...அணா.

3. வாரம் 5 நாட்கள் வீதம் 3 வாரம் பள்ளிக்கூடம் நடந்தது. மொத்தம்... நாட்கள் நடந்தது.

4. மூன்று கைகளில்...விரல்கள்.

5. 6 பேருக்கு மொத்தமாக...கைகள்.

6. தினம் 2 வேளை பள்ளிக்குப் போகிறோம். ஐந்து நாட்களில் மொத்தம்... வேளை போகிறோம்.

கரும்பலகையில் வாய்பாட்டை எழுதி, அதிலுள்ள காலி இடங்களைத் தக்கவாறு பூர்த்தி செய்யச் சொல்லலாம்:

| | | |
|---|---|---|
| $1 \times 5 = \ldots$ | $\ldots \times 5 = 15$ | $8 \times \ldots = 40$ |
| $2 \times 5 = \ldots$ | $\ldots \times 5 = 30$ | $3 \times \ldots = 15$ |
| $5 \times 5 = \ldots$ | $\ldots \times 5 = 40$ | $2 \times \ldots = 10$ |
| $8 \times 5 = \ldots$ | $\ldots \times 5 = 5$ | $9 \times \ldots = 45$ |
| $6 \times 5 = \ldots$ | $\ldots \times 5 = 50$ | $5 \times \ldots = 25$ |

இங்கு இரண்டாவது மூன்றாவது வரிசைகளில் வருவன உண்மையில் வகுத்தல் மூலம் பெறவேண்டுவனவாகும். எனினும் பெருக்கல் வாய்பாடுகளைக் கொண்டே விடை சொல்ல இயலும். இவ்வாறான யுக்திக் கணக்குகளும் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். உதாரணமாக,

1. பொம்மை ஒன்று 2 அணா. 8 அணாவுக்கு எத்தனை பொம்மைகள் வாங்கலாம்.

2. ஒன்று 5 அணா வீதம் 15 அணாவுக்கு எத்தனை சிலேட்டுப் பலகைகள் வாங்கலாம்?

புளியவிரையைக் கொண்டு விளையாடும்போது குழந்தைகள் விரைகளை 10, 10-ஆகக் குவிக்கின்றனர். "ஒற்றையோ, இரட்டையோ" என்ற விளையாட்டில் இரண்டு இரண்டாகப் பிரித்து வைக்கின்றனர். இவ்வாறு சில ஆட்டங்கள் ஆடவும் செய்யலாம்.

# "வாழ்வில் வளம்"

# அல்லது யோகாசனங்களும் மனித வாழ்வும்

அகில இந்திய யோகாச்சாரியா-மாயூரம்-கோ. ப. வேலன், ஓவியப்புலவர்,
உடற் பயிற்சி வல்லுனர், காந்தி கலா நிலையம், எரிசினம்பட்டி, கோவை ஜில்லா.
படப்பிடிப்பு:—G. K. V. நாதன், ஸ்டுடியோ, காரைக்கால்.

## 14. பாதி மீன் வடிவ வில் நிலை

*பூதலமேல் நோய்நீக்கும்*
*புன்னகையாம் வாழ்வாக்கும்*
*பாதிமீன் வில்லுருவாம் பார்.*
—"வேலன்"

உடுத்திய ஆடை அழுக்கடைகிறது. அழுக்கடைந்த ஆடையை அடித்துத் துவைத்து, கசக்கி, அலசி, முறுக்கிப் பிழிகிறோம். ஆடை தூய்மையடைகிறது. உடலம்—முதுகெலும்பை வலது புறமும், இடது புறமும் முறுக்க, உடலழுக்கு நீங்கி உடலை நீடித்து மாசிலா நல்வாழ்வு பெறும் நோயற்று வாழலாம்.


ஆசனம் பயிலும் வழி:—விரிப்பின் மேல் பாதித் தாமரை மலர் நிலையில் அமர்க. அதாவது விரிப்பின்மேல் இரு கால்களையும் நீட்டி அமர்க. கால்களைச் சிறிது அகட்டி வைத்துக்கொள்க. இடது காலை மடக்கி குதிகால் வலது அடித்தொடையைத் தொடுமாறு வைக்கவும்—குதிகால் குதத்தின் பக்கமிருக்கும். பின்னர் வலதுகாலை மடக்கி இடது தொடையின்மேல் வைக்கவும். மூச்சை வெளிவிட்டவாறே நிதானமாக இரு கைகளாலும் வலது முழங்காலைப்பற்றி உயர்த்தி இடது மார்பின்மேல் படச் செய்க. அதுபொழுது வலதுகால் தானாகவே வழுக்கிச் சென்று இடது துடையின் வெளிப்புறம் உள்ளங்கால் தரையில் நன்கு பதிந்துவிடும். பிறகு மூச்சை உள்ளிழுக்கவும். மூச்சை வெளிவிட்டவாறே உடலை நன்கு வலதுபுறம் முறுக்கித் திருப்புக. தலையையும் முடிந்த அளவு வலது புறம் திருப்புக. வலது முழங்காலைப் பற்றியுள்ள வலது கையை எடுத்து முதுகுப்புறமாகச் செலுத்தி, இடது முன் துடையில் பட்டுக்கொண்டிருக்கும் வலது கணுக்காலை விரல்களால் நன்கு பிடித்துக்கொள்க. (மீன் வடிவ வில் நிலை பின்புறத் தோற்றம் படம் காண்க.) மூச்சை உள்ளிழுத்துக் கொள்க. மூச்சை வெளிவிட்டவாறே உடலைச் சிறிது தளர்த்தி நன்றாக முறுக்கி வலது முழங்காலைப் பற்றியுள்ள, இடது கையை நீட்டியவாறே அக்குள் (கக்கத்தின்) வழியே முழந்தாளை மறுபுறம் செலுத்தி இடது தோள்பட்டையின் பின்புறத்தில் படுமாறு வைக்கவும். ஓர்முறை மூச்சை உள்ளிழுக்கவும். மூச்சை வெளிவிட்டவாறே, நீட்டியுள்ள இடது கையை மடக்காமல்—வலது முழங்கால் இடப்புறம்—இடது கை வலது முழங்காலின் வலப்பக்கம் ஒட்டியவாறே வலதுகால் பெருவிரலை இடது கைவிரல்களால் நன்கு பிடித்துக் கொள்க. மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி வெளி விடுக. இந்நிலையில் 30 விநாடி முதல் 2 நிமிடங்கள் வரை இருக்கலாம். இந்நிலையைக் கால்கள் மாற்றியும் உடலை இடது புறம் முறுக்கியும் செய்யவேண்டும். வலது புறம் செய்யும் கால அளவேதான் இடது புறமும் செய்யவேண்டும். ஒரு முறைக்குப் பன்முறை படத்தைக் கவனித்து நன்கு பழகுக. (பாலர் கல்வி—மே ஜூன், 1953, படம் 7. அ.) படம் "அ" இதை விளக்கும்.

சிலருக்கு முதலில் கால் பெருவிரலைப் பற்ற இயலாது. கடினமாயிருக்கும். ஆதலின் அவர்கள் சோர்விலாது, இடது முழங்காலைப் பற்றிப் பழக சில நாட்களில் கால் விரல்களைப் பற்றும் நிலை தானே வந்தெய்தும். இதில் மூன்று பூட்டுகள் உள்ளன. (1) கணுக்கால் பூட்டு. (2) முழங்கால்—தோள்பட்டைப் பூட்டு. (3) கால் பெருவிரல்—முழங்கால் பூட்டு, ஆனை அசைத்தாலும் பூட்டுகள் பிரியாது.

நன்மை:—முதுகு எலும்புகள் வலது இடது புறம் நன்கு முறுக்கப்படுகின்றன. முதுகெலும்பு வலுவுற தண்டுவடம் வலுப்பெற்று நன்கு உழைக்கும். வயிறும் குடலும் நன்கு அமுக்கப்படுகிறது. இதனால் வயிறு வன்மையும் வடிவும் பெறும். மேலும், நீர் ரோகம், குடல் வாதம் போன்ற வியாதிகளுக்கும் நன்மருந்தாகும். முழங்காற்பிடிப்பு, மூலரோகம், வாதம் போன்ற பல கொடிய நோய்களையும்

எளிதே அகற்றும் நன்மருந்து. கழுத்தும் முதுகும் கவினுறு வனப்பும் வன்மையும் பெறும்.

இஃதே அர்த்த மச்சயந்திர ஆசனம்.



மீன்வடிவ வில்நிலை, (பின்புறத் தோற்றம்)

## 15. முழுமீன் வடிவ வில் நிலை

முறுக்க முதுகெலும்பை மும்மலமும் நீக்கும்
முழுமீன் வில்லுருவாம் காண்.
—"வேலன்"

பாதி மீன்வடிவ வில்நிலை போல் தோன்றும். ஆயினும் ஒரு முக்கிய மாறுதல்—அதாவடி—குதிகால் குதத்தின் பக்கத்தில் ஒன்றி இருப்பதற்கு பதில் அடிவயிற்றில் அமிழ்ந்திருக்கும்.

தாமரை மலர் நிலையில் அமர்க.—வலது காலை இடது தொடைமேல் வைக்கவும். இடது காலை வலது கணுக்கால்மேல் பட்டவாறே இடது தொடைமேல் வைக்கவும். மூச்சை உள்ளிழுக்கவும். மூச்சை வெளிவிட்டவாறே உடலை இடதுபுறம் முறுக்கி இடது முழங்காலை இருகைகளாலும் பற்றி, உயர்த்தி வலது மார்பில் படச் செய்க. அதுபோழ்து இடது கணுக்கால் வலது தொடையை தொட்டவாறே உள்ளங்கால் தரையில் நன்கு பதியும்படி செய்க. பின்னர் மூச்சை உள்ளிழுத்து, வெளிவிட்டவாறே வலது கையை இடது முழங்காலின் வெளிப்புறமாக நீட்டி, உடலை இன்னும் நன்முக இடது புறம் முறுக்கி, இடது கால் பெருவிரலைப் பற்றுக. வலது முழங்கை இடது முழங்காலின் வெளிப்புறம் தொட்டவாறு இருப்பதுடன் புறங்கையும் இடது முழங்காலைத் தொட்டவாறு இருக்க வேண்டும். பிறகு மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி வெளிவிடுக. ("பாலர் கல்வி" மே, ஜூன் 1953, படம் 7-ஆ) படத்தை ஒரு முறைக்கு இருமுறை முன்புற, பின்புறத் தோற்றங்களை நன்கு கவனித்துப் பழகுக. இந்நிலையில் அரை நிமிடங்கள் முதல் இரண்டு நிமிடங்கள் வரை பழகலாம். அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப ஐந்து நிமிடங்களும் பழகலாம்.

இந்நிலையில் இருந்த பின்னர் கால்களை மாற்றி உடலை வலதுபுறமும்—முறுக்கிச் செய்க.

சூலுற்ற பெண்கள் செய்யக் கூடாது. மகப்பேற்றின் பின்னர் இரண்டு மாதங்கள் கழித்துப் பழகலாம்.

நன்மை :—பாதிமீன்வடிவ வில் நிலையின் பலனுடன், பல்வேறு வகையான குடல் ரோகங்களும், குடல் ஏற்றம், இறக்கங்களும் எளிதே அகலும். அண்ட வாதத்திற்கு அருமையான மருந்து. குடல் சம்பந்தமான புற்று நோய்களை எளிதே ஒழிக்கும். தேங்கிக் கிடக்கும் பழைய மலங்களை மிகவும் விரைவில் வெளியேற்றும். நல்ல பசி எடுக்கும். வயிற்றின் பக்கமுள்ள ஊளச்சதை ஒழியும். குதிக்கால் குடல்களின் பக்கம்—வயிற்றில் அழுந்துவதால் வயிறு சிறுத்தும் வன்மையும் அடையும். இடையும் எழில் பெறும். பெண்களுக்கு இடையே ஒரு தனி அழகு. சிற்றிடை அடைவதற்கு சிறந்த ஆசனம். பெண்கள் பயில மிக மிக உயர் வாழ்வு எய்துவர். பேறும் எளிதாகும். முதுகுபுறம் அமைந்துள்ள சிறுநீர்க் கோளங்கள் ஊறின்றி உழைக்கும் தன்மை பெறுகின்றன. அதன் பக்கமேயுள்ள "அட்ரினல்ஸ் (Adrinals) என்ற குழலற்ற கோளங்கள் உறுதிபெற்று உழைக்கின்றன. இதயத்துடிப்பை நன்கு இயக்கி ஆட்சி செய்யும் "அட்ரினலின்" (Adrinalin) என்ற ரசம் இதிலிருந்துதான் பெருகுகிறது. முதுகெலும்பு வன்மையுற என்றும் இளமையுடன் வாழலாம். விந்து கெட்டியுறும். இல்வாழ்வில் நீடித்த இன்பம் காணலாம். வாதத்தால் வலிவிழந்த உறுப்புக்கள் வலுப்பெறும். கனவில் விந்து வெளியேற்றம் கட்டுப்படும். இவ்வாசனத்தை மக்கள் குலம் பழக மாண்புற்று

(139-ம் பக்கம் பார்க்க)

# செய்தித் திரட்டு

## 1) திண்டிவனம்

**1-12-54**ல் திண்டிவனம் குஷால்சந்த் உயர்தர ஆரம்பப் பாடசாலை மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உள்பட 60 பேர் ஷை பாடசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் S. சுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமையில் திண்டிவனம் S. P. S. லக்ஷ்மிவிலாஸ் பஸ்ஸில் புதுவைக்கு உல்லாசப் பயணம் சென்றனர். அங்கு பகவான் அரவிந்தரின் சமாதி, அரசாங்க மருத்துவ நிலையம் (Govt. Hospital), கண்ணாடி பங்களா மற்றும் சரித்திர சம்பந்தமான கடற்கரைக் காக்ஷிகள் யாவற்றையும் கண்டு களித்து அன்று மாலை 7 மணிக்குத் திரும்பினார்கள்.

இப்பிரயாணம் இனிது நடைபெற பேருதவி புரிந்த ஷை பஸ் சர்விஸ் முதலாளி மானேஜருக்கும் X-ray போன்ற தத்துவங்களை விளக்கியும் நேரடியாகச் செய்து காட்டியும் உதவிபுரிந்த புதுவை மருத்துவ நிலைய அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

## (2) தவுலதாபாத்

**4-12-54**ல் தவுலதாபாத், கிருஷ்ணகிரி ஆகிய இரு செண்டர்களின் ஆரம்ப ஆசிரியர் சங்கங்களின் ஆண்டு விழா, தவுலதாபாத் போர்டு ஆரம்பப் பாடசாலையில் ஸ்ரீ M. R. லக்ஷ்மீநாராயணன், கிருஷ்ணகிரி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம், கிருஷ்ணகிரி உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீ சுகவனம் சிவப்பிரகாசனார் அவர்கள் 'ஆசிரியர்களின் முன்னேற்றம்' என்ற பொருள் பற்றியும், தவுலதாபாத் ஆரிசிரியர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ G. N. வரதாசார் அவர்கள் 'நம் நாட்டிற்கேற்ற கல்வி' என்ற பொருள் பற்றியும் பேசினார்கள்.

சங்க அங்கத்தினர்களால் சங்கீத கலா நிகழ்ச்சிகளும், தேனீர் விருந்தும் நடைபெற்று **4-30** மணிக்கு விழா முற்றுப்பெற்றது.

## (3) கோவிலூர் நல்லம்பள்ளி

**4-12-54**ல் கோவிலூர் வட்ட ஆரம்ப ஆசிரியர் சங்கம் சீனியர் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ P. சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. S. கோவிந்த ராவ் அவர்கள் திருக்குறளில் பெருமை என்னும் பகுதியைப்பற்றிக் கூறினார்கள்.

பிறகு புதிய ஆண்டிற்கு ஸ்ரீ N. T. தங்கவேல் சங்கத்தின் காரியதரிசியாகவும் ஸ்ரீ S. ராயப்பன் உப காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வந்தனோபசாரத்திற்கு பின் நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

## (4) கல்லாவி

5-12-54ல் கல்லாவி போர்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் மாணவர்களும், ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர் B. கண்ணையா அவர்களின் தலைமையின் கீழ் பாரூர் ஏரி, நெடுங்கல் அணைக்கட்டு (சேலம் ஜில்லா கிருஷ்ணகிரி தாலூகா) முதலிய இடங்களை 8 ஆசிரியர்களும், 12 மாணவர்களும், சைகலில் உல்லாச பிரயாணம் சென்று வந்தனர். இவர்களுக்கு வழியே ஊர்களிலுள்ள ஆசிரியர்கள் உணவளித்து உபசரித்தனர். அவர்களுக்கு நன்றி.

## (5) குடந்தை

சிறிய மலர் அவைக்கப்பள்ளி மாணவர் மன்றம் ஜூபிலி மஹாலில் கூடியது. ஷை விழாவிற்குக் குடந்தை வட்டார கிராமத் தலைவர்களாகிய உயர்திரு. காதர் பாக்ஷா, உயர்திரு. சண்முகம் தலைமை தாங்கினார்கள். கடவுள் வணக்கத்திற்குப் பிறகு பள்ளித் தலைமை ஆசிரியர் உயர்திரு. S. நடேச பிள்ளை அவர்கள் தலைவர்களுக்கு மாலை சூட்டியபின் சங்கத்தின் சென்ற கூட்டத்தின் நடவடிக்கைகள் வாசிக்கப்பட்டன. பின்னர் பள்ளித் தலைவர் சொற்பொழிவு ஆற்றும்பொழுது நம் நாடு முன்னேற கல்வி அவசியம் எனவும் பெரும் தனவந்தர்கள் கல்விக்கு வசதியளிக்கப் ப துறைகளிலும் முன்வர வேண்டும் என்றும் மற்றைய நாடுகள் முன்னேறுவது மே சொன்ன காரியங்களில் முன் வருவதி லேயே என்றும், நம் நாட்டினரும் அவ களைப் பின்பற்றினால் "நம் நாடும் மு னேறும்" என்று சொல்லிவிட்டு ஆசிரிய களின் தரத்தை அதிகப்படுத்துவதற்கு ஒ வொருவரும் மனோ-வாக்குக் காயங்களா

உதவி செய்யவேண்டுமென்றும், எல்லா ஆசிரியர்களும் கடமையை உணர்ந்து தொண்டு ஆற்றவேண்டும் என்றும் சொல்லி விட்டு மாணவர்களுக்கும் சில அறிய புத்தி மதிகளைக் கூறினார். பின்னர்—

மாணவர்கள் "காலரா என்ற தொத்து நோயும் அதைத் தடுக்கும் முறையும்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். அதைப் பின்பற்றி பள்ளி ஆசிரியர் திரு. G. நாராயணசாமி, சிறிய மலர் உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் வித்வான் கணேசன் முதலியவர்கள் பேசினார்கள்.

(6) வேப்பந்தட்டை

டிசம்பர் திங்களின் கூட்டமானது 11-12-54ல் வேப்பந்தட்டை திரவிய சகாயத் தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது. தொண்டப்பாடியிலிருக்கும் பள்ளியின் ஆசிரிய மானேஜர் ஸ்ரீ T. N. சின்னசாமி உடையார் கடவுள் வணக்கம் பாடினார்கள். அனுக்கூர் மாவட்ட மன்றப் பள்ளியின் துணையாசிரியர் திரு. சையத்காதர் மொஹிதீன் சாகேப் தலைமை தாங்கினார்கள். தலைவரது முன்னுரைக்குப் பின்னர் செயலாளர் K. சேதுராமன் அவர்கள் கடந்த கூட்டத்து நடவடிக்கைக் குறிப்புகளை வாசித்துக் காட்டினார். "சமூக சேவையில் மாணவர்களை ஈடுபடுத்துவதின் அவசியமும், உபாயங்களும்" என்ற தலைப்பில் வெண்பாவூர் மாவட்டமன்றப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. A. இஞ்ஞாசிமுத்து அவர்களால் பேசப்பட்டது. திருக்குறள் விளக்கவுரை, உடும்பியம்பள்ளியின் ஓராசிரியர் K. சேதுராமனால் நிகழ்த்தப்பட்டது.

சென்னை அரசியலார் நிறுவனம் செய்துள்ள ஆரம்பக் கல்வியின் பரிசீலனைக் குழுவில் ஆரம்பக் கல்வித் துறையில் அநுபவம் வாய்ந்த ஒருவரை நியமிக்காததுபற்றி கழகத்தவர்கள் வருந்துவதாக ஓர் தீர்மானமும், புதுக்கல்வித் திட்ட அமல் காலத்தில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களைக் கொண்டு எதையும் முடிவு கட்டாது, தற்போதுள்ள புள்ளி விவரங்களைக்கொண்டு ஆரம்பக் கல்வி சம்பந்தமாக ஓர் சீர்திருத்தம் காணல் நலமென ஒரு தீர்மானம் ஆசிரியர் இஞ்ஞாசி முத்துவால் கொண்டுவரப் பட்டு அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

(7) உப்பிலியபுரம்

18-12-54ல் கோட்டைப்பாளையம் R. C. ஆரம்ப உயர்தரப் பாடசாலையில் 12வது ஆண்டுவிழா திருச்சிராப்பள்ளி, நாட்டாண்மைக் கழக உபதலைவர் திரு. V. A. முத்தையா அவர்கள் தலைமையில் கூடிற்று. கடவுள் வணக்கத்திற்குப் பின் காரியதரிசி திரு. T. சென்னகேசவன் அவர்கள் எல்லாருக்கும் நல்வரவு கூறினார்.

தலைவரவர்கள் முன்னுரைக்குப் பின் ஆண்டு அறிக்கை செயலாளரால் வாசிக்கப் பட்டது. மாணவிகள் நடனமாடி, வந்திருந்தாரனைவரையும் மகிழ்வித்தனர். திருச்சிராப்பள்ளி புனித சூசையப்பர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் திரு. ரம்போலா மாஸ்கரனஸ் அவர்கள் "நாம் மூவர்" (ஆசிரியர் - மாணவர் - பெற்றோர்) என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். வைரிசெட்டிபாளையம் S. V. V. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு. V. அரங்கராசன், B. A., B. T. அவர்கள் 'ஆசிரியர் நிலை' என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்.

(8) ஓமலூர்.

23-12-54 மாலை 3 மணிக்கு ஓமலூர் வேலாசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி விளையாடுமிடத்தில் ஓமலூர் வட்ட ஆரம்பப் பள்ளிகளின் விளையாட்டு விழா கோயமுத்தூர் ரீஜினல் இன்ஸ்பெக்டர் ஆப் பிசிகல் எடுகேஷன் திருவாளர் P. நடராஜன், B. A., L. T., D. P. Edn. அவர்கள் தலைமையில்நடைபெற்றது. தேசியக் கொடியை ஏற்றுவித்து அணிகளின் வணக்கத்தையும் தலைவர் ஏற்றார். ஓமலூர் ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் திருவாளர் பால் கிருபாநாதன் அவர்கள் கூட்டத்தினர் யாவரையும் வரவேற்றார். ஓமலூர் பஞ்சாயத் போர்டு உபதலைவர் திருவாளர் O. A. முத்தியால் செட்டியார் பெற்றோர் சார்பாக சொற்பொழிவு ஆற்றினார். ஓமலூர் வேலாசாமி செட்டியார் உயர்நிலைப்பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர் திருவாளர் S. J. ஸ்டீபன் அவர்கள் விளையாட்டுகளை நடத்தினார்.

ஓமலூர் சுற்றுப்புற ஆரம்பப் பள்ளிகள் இவ்விழாவில் கலந்து கொண்டன. ஒரு அணிக்கு 16 குழந்தைகள் வீதம் 30 அணிகளாக விளையாடினார்கள். உள்ளூர் வாசிகளும், கிராம வாசிகளும் திரளாக வந்து கண்டு களித்தனர்.

தலைவர் அவர்கள் தம் உரையில் தாம் கண்ட விழாக்களில் இது சிறிய முறையில் முதன்மையாக நடைபெற்றது என்றும்,

ஆண் பெண் பேதமின்றி குழந்தைகள் விளையாட்டுகள், கும்மி, அபிநயம், நடனம் செய்தது போற்றற்குரியது என்றும், நேருஜி போன்ற தேசத் தலைவர்கள் குழந்தைகளின் விளையாட்டிற்கு முக்கியம் அளிப்பதுபோல் எங்கும் இம்மாதிரி விளையாட்டுகளை வருடம் ஒரு முறை நடத்த வேண்டும் என்றும் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள்.

(9) லெட்சுமிபுரம்.

3-12-54ல் ஜனாதிபதி இராஜேந்திர பிரசாத் அவர்களின் 71-வது பிறந்ததின விழா சொக்கலிங்க வித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு K. இராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறைவணக்கத்திற்குப்பின் ஜனாதிபதி அவர்களின் சேவை, தியாகம், வாழ்க்கை வரலாறுபற்றித் தலைமை ஆசிரியரும், உதவி ஆசிரியர்களும் பேசினர். மாணவிகளின் கும்மி, கோலாட்டங்கள் நடைபெற்றன. தலைவர் முடிவுரைக்குப்பின் ஜனாதிபதி அவர்கள் நீடூழி வாழப் பிரார்திக்கப் பெற்றது.

24-1-55ல் ஸ்ரீ மீனாட்சி சங்கக் கூட்டம் வித்யாசாலை உதவி ஆசிரியர் திரு K. ராமசுவாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது இறைவணக்கத்திற்குப்பின் சொ. வி. மாணவ, மாணவிகளின் பேச்சு, பாட்டு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் நடைபெற்றன.

26-1-55ல் குடியரசு தினவிழா கொண்டாடப் பெற்றது. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு G. சுவாமிநாதய்யரவர்கள் மூவர்ண தேசியக் கொடியை ஏற்றுவித்தனர். கொடிவணக்கம் நடந்தபின் வித்தியாசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குடியரசு சென்ற 5 வருடங்களில் சாதித்துள்ள காரியங்களைப் பற்றி ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் பேசினர். பின் வித்தியாசாலை மாணவ மாணவிகளுக்கும் வந்திருந்தோர்க்கும் தின்பண்டம் நல்கி விழா இனிது நிறைவெய்தியது.

(10) திருச்சி.

14-11-54ல் திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்கள் சங்க செயற் கமிட்டிக் கூட்டம் யூனியன் தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. பொதுக் காரியதரிசி அவர்களால் சென்ற கூட்ட நடவடிக்கை வாசிக்கப்பட்டு, அங்கீகரிக்கப் பட்டது. வரவு செலவு தணிக்கை விஷயம் அடுத்தக் கூட்டத்தில் செய்வதென ஒத்தி வைக்கப்பட்டது. தீர்மானங்கள்; சென்னை ராஜ்ய ஹரிஜன நல டைரக்டர் அவர்கள் L.Dis. 21367/53 Dated 27-7-54 தேதிய உத்தரவில் கண்டுள்ளபடி, பலன் கிடைக்கப்படாத தீர்மானங்களின் மீது மீண்டும் நடவடிக்கை எடுக்கும்படியும், மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களின் மீதும் நடவடிக்கை எடுக்கும்படியும், ஹரிஜனப் பிள்ளைகளின் நலனும், பள்ளியின் ஆஜரும் பாதிக்கா வண்ணம், செப்டம்பர், அக்டோபர் '54 மதிய உணவு பணத்தை உடனடியாக வழங்கும்படியும் தீர்மானிக்கப்பட்டன.

(11) திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்களுக்கு பொதுக் காரியதரிசியின் அறிவிப்பு.

சென்னை ராஜ்ய ஹரிஜன நல டைரக்டர் அவர்களது L. Dis. 12787/54 dated 2-9-54 தேதிய உத்தரவு கீழ்கண்டபடி அறிவிக்கிறது.

"திருச்சி ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்களின் யூனியனால் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின்மீது, மதராஸ் ஹரிஜன நல டைரக்டர் அவர்களது அலுவலகத்திலும், இதர அலுவலகங்களிலும் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை விஷயமாக, இனி அவ்வப்போது யூனியனுக்கு அறிவிக்கப்பட இருக்கும் என்றும், இதன்படியே டைரக்டர் அவர்களது அலுவலகத்தில் எடுத்துக்கொண்ட நடவடிக்கை விஷயமாகக் கூட, ஏற்கனவே L. Dis. 21367/53 dated 27-7-54 தேதிய உத்தரவிலும் வெளிவந்துளது என்றும், இதன் நகல் திருச்சி ஜில்லா நல அதிகாரி அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது" என்றும் கூறுகிறது.

பொதுக் காரியதரிசியின் வேண்டுகோள்:—எனவே ஆசிரியர்கள் ஆங்காங்கு ஒவ்வொரு தாலூகாவிலும் யூனியன் சட்ட திட்டத்தில் கண்டுள்ளபடி, அடிக்கடி கூட்டங்கள் நிறுவி, குறைகளையும், தேவைகளையும் நல்முறையில் தீர்மானமாக்கி, முறைப்படி அதிகாரவர்க்கத்தினர்களுக்கு அறிவித்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1-1-55 இப்புத்தாண்டின் தினத்தன்று, திருச்சி ஜில்லாக் கலெக்டர், ஜில்லா கல்வி

அதிகாரி, ஜில்லா நல அதிகாரி ஆகிய இவர்களை யூனியன் சார்பில் கண்டுகொள்ளப்பட்டது. அவ்வமயம் ஆசிரியர்களுக்குரிய சலுகை, உரிமை, குறை, தேவை, புது பள்ளிகள் உற்பத்தி, மற்றும் சகல முன்னேற்ற வழி சம்பந்தமாக விண்ணப்பக் கோரிக்கைகள் ஒவ்வொருவரிடமும் எழுதிக் கொடுக்கப்பட்டன. ஆவன செய்வதாக அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

---

(135-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வர். இதில் நான்கு பூட்டுக்கள் உள்ளன. பாதி மீன் வடிவவில் நிலையில் உள்ள மூன்றுடன் தொடைக்கும் விலாவிற்கும் இடையே அடி வயிற்றிலுள்ள குதிகாலும் கால் விரல்களும் நான்காவது பூட்டாகும். சரியான நிலையில் நாளாயினும் அவரவர்கள் செய்யும் அளவிற்குப் பலன் உண்டு. அனைவரும் முயல்க.

---

## சந்தாதார்களுக்கு அறிக்கை

1955 ஜனவரி மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 8.
மதுரை—Md. 3.
ராமனாதபுரம்—Rd. 23, 42.
தஞ்சாவூர்—Tan. 4, 35.
திருநெல்வேலி—Tin. 35.

குறிப்பு :—மேற்படி சந்தாதார்களும் சந்தா பாக்கியுள்ள மற்ற சந்தாதார்களும் தங்கள் சந்தாத் தொகையை இம்மாத முடிவிற்குள் கட்டிவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடுமாகையால் சந்தாவை முன்கூட்டியே செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் சந்தா அனுப்ப அசௌகரியமுள்ளவர்கள் செலுத்தக்கூடிய தவணையை முன்பாகவே தெரிவிக்கலாம்.

—பத்திராதிபர்

# மதிப்புரை

ஆதாரக் கல்வி—(இரண்டாம் வகுப்பில் தமிழ்மொழி).

கோவை, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம், காந்தி ஆசிரியப் பயிற்சிப்பள்ளி மாணவ ஐக்கிய சங்கம் பிரசுரம். விலை 0-3-0. நூறு பிரதிகள் வாங்கினால் ரூ. 15-0-0 தான்.

கலா நிலையத்தில் இரண்டாம் வகுப்பு. ஆசிரியர் ஸ்ரீ ஜி. ஞானப்பிரகாசம் எழுதிய இந்த நூல் ஆதாரப்பள்ளி துவக்க நிலை ஆசிரியர்களுக்கு மிகவும் பயன் தரும். ஆதாரக் கல்வி நாடெங்கும் பரவி வரும் இக்காலத்தில் மொழிப் பயிற்சி திட்டமிடுவதைப்பற்றி ஆசிரியர்கள் பயம் கொள்ள வேண்டியதில்லை இந்நூல் முன்னுரையில் திரு. க. அருணாசலம் அவர்கள் கூறியிருப்பதுபோல, செயல் அனுபவத்தை யொட்டியே மொழிப்பயிற்சி அமையவேண்டும். செயலுக்கும் சிந்தனைக்கும் துணையாக மொழி இருக்கிறது.

மொழிப் பயிற்சிக்கான திட்டத்தை, முக்கியமாகத் துவக்கநிலைத் திட்டத்தை ஆசிரியர்கள் தாமே தயார் செய்து கொள்வது நல்லது எனினும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர் தரும் இந்த சிறந்த நூல் எல்லாருக்கும் துணையாக உதவும். வாய்மொழி, வாசிப்பு, எழுத்து இம்மூன்றும் செயல் திட்டத்தோடு எங்ஙனம் நிறைவேற்றலாம் என்று நன்கு விளங்கும்.

எல்லா ஆசிரியர்களும் இந்த நூலைப் பயன்படுத்துமாறு மகிழ்ச்சியுடன் சிபாரிசு செய்கிறோம்.

V. N.


## ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்

# நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

# கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. ED. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றாம் புத்தகம் | (மூன்றாம் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# பத்திராதிபர் குறிப்புகள்

## ஆரம்ப ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மகாநாடு

ஆரம்பக் கல்வியின் பல பிரச்னைகளைக் கவனிக்க, தென் இந்திய ஆசிரியர் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் பிரதிநிதிகளின் மகாநாடு மார்ச்சு 5உ சனிக்கிழமையன்று, சென்னை, திருவல்லிக்கேணி ஹிந்து உயர்தரப் பாடசாலையில் கூடும். இணைக்கப்பட்டுள்ள யூனியன்கள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்கப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டில் ஆரம்பக் கல்வி ஒரு அவசரமானதும் முக்கியமானதுமாயுள்ள பிரச்னையாகும். இவ்விராஜ்யத்திலே பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் அதிகம். கட்டாயம் இல்லாமலே, அதிக மாணவர்கள் நமது பள்ளியிலும் படித்து வருகின்றார்கள். பள்ளி வயதுள்ள மாணவர்களில் 55 சதவீதம் பள்ளியில் படித்து வருகின்றார்கள். ஆரம்பக் கல்வியில் பெற்றோர்கள் அதிக சிரத்தை கொண்டுள்ளார்கள் என்பதற்கு இதே அறிகுறியாகும்.

எனினும், மற்ற மாணவர்களுக்கு எவ்வாறு கல்வி வசதி அளிப்பது என்பது முக்கியமாகக் கருதப்படவேண்டும். ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் பல நூற்றுக் கணக்கில் ஸ்தாபித்துள்ளது ஓரளவு இந்தக் குறையை நீக்க உதவலாம்.

இரண்டாவதாக, ஆரம்பக் கல்வி 14 வயது பூர்த்தியாகும் வரையில் எல்லா மாணவர்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்பது நமது இந்திய அரசியல் சட்டத்தில் கண்டுள்ள ஒரு முக்கிய ஷரத்தாகும். அப்படி 8 ஆண்டுகளுக்குக் கட்டாயக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது ஒரு பெரும் திட்டமாகும். நம் ராஜ்யம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முதன்மை முயற்சி எடுக்கும் வல்லமைகொண்டது என்று சொல்லலாம். ஆனால் அதை நிறைவேற்ற வேண்டும் என்ற மன உறுதி அவசியம். டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் ஏற்படுத்தியுள்ள கமிட்டியார் இதற்குத் தகுந்த திட்டம் தயாரிக்க யோசனை புரிவார்கள் என்பதில் ஐயமில்லை. நமது மகா நாடும் இவ்விஷயத்தை நன்கு ஆலோசிக்கும் என்று நம்புகிறோம்.

மூன்றாவதாக, ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதிலும் நிர்வகிப்பதிலும் அரசாங்கத்தார் முழுப்பொறுப்பு எடுத்துக்கொள்வது அவசியமாகும். ஆரம்பக் கல்வியே ஜனநாயகத்திற்கு அடிப்படையானது. நல்ல தரமுள்ள ஆரம்பக்கல்வியில்லாவிட்டால் ஜனநாயக ஆட்சி இருக்க முடியாது. பொதுஜன ஒத்துழைப்பு அவசியம். எனினும் பொது மக்களே கல்விக்கு ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கம் வாளாவிருந்தால் நாட்டின் ஜனநாயக முன்னேற்றம் தடைப்படும் என்பதில் சந்தேகமேயிராது. இந்த விஷயமும் நமது மகா நாட்டில் நன்கு ஆலோசிக்கப்படும் என்று நம்புகிறோம்.

கல்வித்தரம் உயரவேண்டுமானால், நல்ல தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் தேவை. ஆசிரியர்கள் தங்கள் வாழ்க்கையை கஷ்டமில்லாமலும் கவலையில்லாமலும் கழிக்குமாறு சம்பள திட்டமும், நல்ல வேலை செய்யும் வசதிகளும், தங்கள் ஸ்தானங்களை நிரந்தரமாக வகிப்பவர்களுமாகவும் இருக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தை, நாட்டின் பிற்கால நன்மையைக் கவனிக்கக்கூடிய பரந்த மனப்பான்மையுடன் கவனிப்பது அவசியமாகும். கல்வியின் அவசியத்தை

உணர்ந்துள்ள நமது அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் நியாயமான கொள்கையை கடைப்பிடிக்கும்படி மகா நாடு வற்புறுத்தும் என எதிர்பார்க்கிறோம்.

கடைசியாக, அரசாங்கம் ஆதாரக் கல்வி முறையையே தாங்கள் பூர்வமாக ஆதரிப்பதாக பல இடங்களிலும் சந்தர்ப்பங்களிலும் சொல்லி வருகின்றார்கள். எனினும், எல்லாக் கல்வி ஸ்தாபனங்களிலும் இம்முறையைக் கையான போதுமான வசதிகளை ஏற்படுத்த தீவிர முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லை. அம்முறையைக் கையாள நல்ல திறமையுடைய ஆசிரியர்கள் தேவை. அவர்களுக்கும் நல்ல பயிற்சியும் அவசியம். பள்ளிக் கூடங்களில் இருக்கும் வசதிகள் பெரிதும் விஸ்தரிக்கப்படவேண்டும். இது விஷயங்களைப்பற்றியும் அழகப்ப செட்டியார் கமிட்டி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் என்று எதிர்பார்க்கின்றோம். நமது மகா நாடு இவ்விஷயத்தை நன்கு சர்ச்சை செய்து உருவான சிபார்சுகள் செய்யும் என்றும் நம்புகிறோம்.

## பட்ஜெட்டில் ஏதாவது வழி பிறக்குமா ?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நமது நாட்டிலுள்ள ஒரு வாக்கியம். ஆசிரியர் உள்ளத்தில் மார்ச்சு வந்தால் வழி பிறக்குமோ என்ற கேள்வி எழுந்து கொண்டேயிருக்கின்றது. ஆசிரியர்களின் சம்பளக் குறைவு எல்லோருக்கும் தெரிந்ததே. பொருளாதார நிலை உயர்ந்தால் ஆசிரியர் சம்பளத்தை உயர்த்துவதாக மந்திரிகள் ஒவ்வொருவரும் வாக்குக் கொடுத்துக்கொண்டே வருகின்றார்கள். முதன் மந்திரிகள் ஐவர் தொடர்ச்சியாக வாக்குறுதி கொடுத்துள்ளார்கள். கல்வி மந்திரிகள் தொடர்ச்சியாக ஐவர்களும் அதுபோலவே ஆசிரியர்களுக்குச் சொல்லிவந்துள்ளார்கள். எனினும் ஆசிரியர் நிலை, அதுவும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இவர்களின் ஊதிய நிலை, மிக மிகப் பரிதாபகரமாக இருக்கின்றது. நமது சங்கமும் இதைக் கவனிக்கும்படி பல முறை சர்க்காரை வேண்டியுள்ளது. பல தூது கோஷ்டிகளும் இந்நிலையை சீர்படுத்த வேண்டிக்கொண்டுள்ளன. நமது பிரதிநிதிகளும வற்புறுத்தியுள்ளார்கள். காங்கிரஸ் கமிட்டியும் இதைப்பற்றி பரிசீலனை செய்து சிபார்சுகள் செய்துள்ளதாகக் கேள்விப்படுகிறோம். எனவே இந்த வருஷம் பட்ஜெட்டிலாவது ஆசிரியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் திட்டம் காணப்படுமா? நமது ராஜ்ய ஆசிரியர்களின் பொறுமை மிகப் பெரிது. அதையாவது அரசாங்கத்தார் பாராட்டி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, ஆவன செய்வார்கள் என்று நம்புகிறோம். இல்லையேல் பொறுமையை இழக்க நேரலாம். அதன் விளைவு மிக விபரீதமாகாதா ?

## தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

---

## தேச பக்த மாலை

*வித்வான் எம். சண்முகம் பிள்ளை*
*எழுதியது*
எஸ். வையாபுரிப் பிள்ளை, *பி. ஏ., பி. எல்.*
*அவர்களின் முகவுரையுடன் கூடியது*

| | அணா | | அணா |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (*பாரதியார், தாகூர், சரோஜினியார்*) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், *பி. ஏ., எல். டி.*
*எழுதியவை*

6. வீர சிவாஜி *அணா* 10 7. சுவாமி விவேகானந்தர் *அணா* 12

---

*பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்*
4, *பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை*—1

Regd. No. M. 3473

THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

**520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5**

(*Registered under the Insurance Act as a Mutual Insurance Co.*)

## Total Assets Exceed 14,00,000

**No. of Policies over 5000**

THIS is an Insurance Company of the
TEACHERS. Benefits go only to the
TEACHERS. Hence as you are a
TEACHER you should join this
TEACHERS' MUTUAL SOCIETY.

*Have you looked into our New Tables*
*WITH the revised rates of premiums?*

The rates are to your advantage.

There are SEVEN TABLES for periods of
10, 15, 20, 25 and 30 years.

**All Grades of teachers up to the age of 45 can now become members. Benefits range from 250 to 900 to start with and go on increasing as years pass by and each unit on maturity will get you from Rs. 400 to 1440 according to the tables, besides bonus benefits.**

*This is the cheapest Insurance Company in the field.*

For particulars apply to :

S. D. KRISHNAMURTI RAO,
Secretary.

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press, Ltd., 109-C, Mount Road. Madras-18. Edited & Published by Sri S. Natarajan, for "The South India Teachers' Union," at 520, High Road, Triplicane, Madras-5.